சுருக்கம்

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் – மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு –பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு சிறந்த தரத்திலான கல்வியினை நன்மதிப்புள்ள தனியார் பள்ளிகள் மூலம் வழங்குதல் – அனுமதி அளித்தல்– ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ1) துறை

அரசாணை (நிலை) எண்.14

நாள்:31.01.2017
துன்முகி, தை 18,
திருவள்ளுவர் ஆண்டு 2048
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.92, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 30.5.2007.
2. அரசாணை (நிலை) எண்.138, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 15.2.2008.
3. அரசாணை (நிலை) எண்.161, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஜ1) துறை, நாள் 12.11.2012.
4. தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006 அவர்களின் கடிதம் எண்.W1/ 7381/2014, நாள் 17.08.2015.
5. அரசாணை (நிலை) எண்.112, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள்18.10.2015.

------

ஆணை:-

11.5.2012 அன்று இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது அப்போதைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கட்டுமானத் தொழிலாளர்கள் நலநிதியினை பயன்படுத்தி, அமைப்புசாராத் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறும் வகையில் தனியார் பங்களிப்புடன் கூடிய (PPP mode) உறைவிடப்பள்ளி உருவாக்கப்படும் என அறிவித்தார்.

2. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அரசு மற்றும் தனியார் பங்கேற்புடன் தங்கும் வசதியுடன் கூடிய பள்ளி துவங்குதல் குறித்து பள்ளிக் கல்வித் துறையின் ஒருங்கிணைப்புடன் விரிவான ஆய்வு மேற்கொள்ள தொழிலாளர் ஆணையரின் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. தற்போது தமிழகத்தில், தனியார் பள்ளிக் கட்டண நிர்ணயக்குழுவால் நிர்ணயிக்கப்படும் கட்டணமே வசூலிக்கப்படுவதால், பிற குழந்தைகளிடமிருந்து பெறப்படும் கட்டணத்திலிருந்து அமைப்புசாராத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி கொடுத்தல் இயலாததாகும்.

.த.பி.பா.

3. பார்வை ஒன்று, இரண்டு மற்றும் ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணைகளில், அரசு / அரசு உதவி பெறும் / மாநகராட்சி/ நகராட்சி பள்ளிகளில் படித்து, அதிக மதிப்பெண் பெறும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகளுக்கு சிறந்த தனியார் பள்ளிகள் மூலம் கல்வி வழங்க ஆணைகளும் வழிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

4. பார்வை நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில், தனியார் பங்களிப்புடன் உறைவிடப்பள்ளி தொடங்குவதற்கு பதிலாக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் செயல்படுத்துவதைப் போன்று அரசுப் பள்ளியில் கல்வி பயின்று, அறிவுக் கூர்மையான அமைப்புசாரா தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு அந்தந்த பகுதியில் சிறந்த தனியார் பள்ளிகளின் மூலம் தரமான கல்வி வழங்கலாம் எனத் தொழிலாளர் ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. கவனமான பரிசீலனைக்குப்பின்னர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய நிதியினைப் பயன்படுத்தி, அரசு / அரசு உதவி பெறும்/ மாநகராட்சி/ நகராட்சி/ ஊராட்சி பள்ளிகளில், 5–ம் வகுப்பு வரை பயின்று, அறிவுக் கூர்மையான, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகளிலிருந்து வட்டாரத்திற்கு ஒருவர் வீதம் 385 குழந்தைகள் தேர்வு செய்து, அவர்களுக்கு அந்தந்த பகுதிகளின் சிறந்த தனியார் பள்ளிகள் மூலம் 6–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை கல்வி வழங்கவும், அரசு/ அரசு உதவி பெறும் / மாநகராட்சி/ நகராட்சி பள்ளிகளில் 10–ம் வகுப்பு வரை பயின்று, அதிக மதிப்பெண் பெற்று, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகளிலிருந்து, மாவட்டத்திற்கு பத்து குழந்தைகள் வீதம் (3 மாணவியர் உட்பட) தேர்ந்தெடுத்து, அந்தந்த பகுதிகளின் சிறந்த தனியார் பள்ளிகள் மூலம் 11 மற்றும் 12–ம் வகுப்பு கல்வி வழங்கவும் அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலும், பள்ளிக் கட்டணம் தனியார் பள்ளிக் கட்டண நிர்ணயக்குழுவால் நிர்ணயிக்கப்படும் கட்டணத்தையும், விடுதிக்கட்டணம் ரூ.15,000/– மற்றும் பராமரிப்புக் கட்டணம் ரூ.5,000/– ஒவ்வொரு மாணவருக்கும் ஆண்டொன்றுக்கு வழங்கவும் அனுமதிக்கப்படுகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் அவ்வப்போது வெளியிடப்படும், நெறிமுறைகளை இத்துறையிலும் பரிசீலித்து பின்பற்ற தொழிலாளர் ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் இணைப்பில் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இக்கருத்துருவினை உரிய தருணத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியக் கூட்டத்தில் வைத்து பின்னேற்பு பெறுமாறு தொழிலாளர் ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பெ.அமுதா,
அரசு செயலாளர்.

**பெறுநர்**

தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006. (இ)
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை–600 034. (இ)
செயலாளர், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம், சென்னை–600 102.(இ)

.த.பி.பா.

**நகல்**

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.(இ)
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–600 009.(இ)
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009. (இ)
நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.(இ)
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–600 009.
நிதித் துறை, சென்னை–600 009.(இ)
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–600 009. (இ)
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–600 009. (இ)
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (அநமு–2) துறை, சென்னை–600 009. (2 நகல்)
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

## அரசாணை (நிலை) எண்.14, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஜ1) துறை, நாள் 31.01.2017

## கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு நற்பெயர்பெற்ற தனியார் பள்ளிகள் மூலம் உயர்கல்வி வழங்கும் திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

| | | ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை கல்வி அளித்தல் | பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளுக்கு கல்வி அளித்தல் |
|---|---|---|---|
| 1. | பயனாளிகள் | அரசு பள்ளிகள் / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள்/ மாநகராட்சி / நகராட்சி மற்றும் ஊராட்சி பள்ளிகளில் 5–ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவுபெற்ற தொழிலாளர்களின் குழந்தைகள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற தகுதியுடையவர் ஆவார். | அரசு பள்ளிகள் / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள்/ மாநகராட்சி மற்றும் நகராட்சி பள்ளிகளில் 10–ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவுபெற்ற தொழிலாளர்களின் குழந்தைகள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற தகுதியுடையவர் ஆவார். |
| 2. | பயனாளிகளை தேர்ந்தெடுக்கும் முறை | அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியங்களின் மாவட்ட கண்காணிப்பு குழு மூலமாக பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தொடக்கக் கல்வித்துறையின் உதவியுடன் தனித்தேர்வு ஒன்றினை நடத்தி அதில் அதிகபட்ச மதிப்பெண்கள் பெறும் மாணவ/ மாணவியரில் வட்டாரத்திற்கு (Block) ஒரு மாணவ/மாணவியர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். முதல் மாணவன்/மாணவி இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பாதநிலையில் அடுத்தடுத்த நிலையில் உள்ள மாணவ / மாணவியர் பரிசீலிக்கப்பட வேண்டும். | அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியங்களின் மாவட்ட கண்காணிப்பு குழு மூலமாக பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். 10–ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிகபட்ச மதிப்பெண் பெற்ற மாணவ/மாணவியர்களில், ஒரு மாவட்டத்திற்கு 10 மாணவர்கள் வீதம் (3 மாணவியர் உட்பட) தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்/ மாணவியர் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற விரும்பாத நிலையில் அடுத்தடுத்த நிலையில் உள்ள மாணவ / மாணவியர் பரிசீலிக்கப்பட வேண்டும். |
| 3. | தனியார் பள்ளியை தேர்ந்தெடுக்கும் முறை | i. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நற்பெயர் பெற்ற சிறந்த தனியார் பள்ளிகளின் பட்டியல் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரால் தயார் செய்யப்பட வேண்டும். மாநில வழி பாடத்திட்டம் வழியில் கல்வி அளிக்கும் பள்ளிகள் மட்டுமே தெரிவு செய்யப்படவேண்டும். | i. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நற்பெயர் பெற்ற சிறந்த தனியார் பள்ளிகளின் பட்டியல் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரால் தயார் செய்யப்பட வேண்டும். மாநில வழி பாடத்திட்டம் வழியில் கல்வி அளிக்கும் பள்ளிகள் மட்டுமே தெரிவு செய்யப்படவேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ii. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நற்பெயர் பெற்ற சிறந்த தனியார் பள்ளிகளை, மாணவர்களோ அல்லது அவர்களது பெற்றோர்களோ தேர்வு செய்யலாம்.<br><br>iii. விடுதியில் தங்கிப் பயில்வது கட்டாயமில்லை. மாணவ/மாணவியர் விரும்பினால் மட்டும் விடுதியில் தங்கிப் படிக்கலாம்.<br><br>iv. ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்படும் மாணவ / மாணவியர் அந்த மாவட்டம் தவிர்த்து இதர மாவட்டங்களில் உள்ள தனியார் பள்ளிகளில் சேர்ந்து பயில விருப்பம் தெரிவித்தால் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் மாணாக்கர்கள் விரும்பும் பள்ளிகளில் அவர்களை சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.<br><br>v. எந்தவொரு தனியார் பள்ளியிலும், 6,7,8,9 மற்றும் 10 ஆகிய ஒவ்வொரு வகுப்பிலும் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும் மாணாக்கர்களின் எண்ணிக்கை ஒரு வகுப்பிற்கு மூவருக்கு மிகக்கூடாது. | ii. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நற்பெயர் பெற்ற சிறந்த தனியார் பள்ளிகளை, மாணவர்களோ அல்லது அவர்களது பெற்றோர்களோ தேர்வு செய்யலாம்.<br><br>iii. விடுதியில் தங்கிப் பயில்வது கட்டாயமில்லை. மாணவ/மாணவியர் விரும்பினால் மட்டும் விடுதியில் தங்கிப் படிக்கலாம்.<br><br>iv. ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்படும் மாணவ / மாணவியர் அந்த மாவட்டம் தவிர்த்து இதர மாவட்டங்களில் உள்ள தனியார் பள்ளிகளில் சேர்ந்து பயில விருப்பம் தெரிவித்தால் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் மாணாக்கர்கள் விரும்பும் பள்ளிகளில் அவர்களை சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.<br><br>v. எந்தவொரு தனியார் பள்ளியிலும், 11 மற்றும் 12 ஆகிய ஒவ்வொரு வகுப்பிலும் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும் மாணாக்கர்களின் எண்ணிக்கை ஒரு வகுப்பிற்கு மூவருக்கு மிகக்கூடாது. |
| 4. | மாணவர் சேர்க்கை முறை | மாணவர் தெரிவு செய்யும் பள்ளியில் அவரை சேர்ப்பதற்கு மாவட்ட தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) மாவட்ட தொடக்க கல்வி அலுவலருடன் இணைந்து மாணவர்/மாணவியரது சேர்க்கையினை உறுதிபடுத்த வேண்டும். | மாணவர் தெரிவு செய்யும் பள்ளியில் அவரை சேர்ப்பதற்கு மாவட்ட தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) முதன்மைக் கல்வி அலுவலருடன் இணைந்து மாணவர்/மாணவியரது சேர்க்கையினை உறுதிபடுத்த வேண்டும். |
| 5. | அனுமதிக்கப் படும் வகுப்பு | இத்திட்டத்தின்கீழ் ஆறாம் வகுப்பில் மட்டுமே மாணாக்கர்கள் அனுமதிக்கப்படுவர். | இத்திட்டத்தின்கீழ் 11–ஆம் வகுப்பில் மட்டுமே மாணாக்கர்கள் அனுமதிக்கப்படுவர். |

| | | | |
|---|---|---|---|
| 6. | மாற்றுப் பள்ளியில் கல்வி பயிலுதல் | இத்திட்டத்தின் கீழ் மாணாக்கர்கள் அவர்கள் விரும்பும் நற்பெயர் பெற்ற தனியார் பள்ளிகளில் சேர்க்கப்படும் நிலையில், ஒரு பள்ளியில் சேர்க்கப்பட்ட மாணாக்கர்கள் எக்காரணம் கொண்டும் வேறு பள்ளியில் சேர்க்கப்படமாட்டார்கள். | இத்திட்டத்தின் கீழ் மாணாக்கர்கள் அவர்கள் விரும்பும் நற்பெயர் பெற்ற தனியார் பள்ளிகளில் சேர்க்கப்படும் நிலையில், ஒரு பள்ளியில் சேர்க்கப்பட்ட மாணாக்கர்கள் எக்காரணம் கொண்டும் வேறு பள்ளியில் சேர்க்கப்படமாட்டார்கள். |
| 7. | கட்டணம் | <u>கல்விக்கட்டணம்:-</u><br><br>அரசால் நியமிக்கப்பட்டுள்ள ஒரு நபர் குழு நிர்ணயம் செய்துள்ள கட்டண விகிதங்களின்படி சம்மந்தப்பட்ட பள்ளிகளுக்கு கல்விக் கட்டணம் வழங்கப்படவேண்டும். சம்மந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியரிடம் ஒரு நபர் குழு நிர்ணயித்த கல்விக் கட்டணம் மட்டுமே கேட்கப்பட்டுள்ளது என்ற உறுதிமொழி பெற்று தொகையினை விடுவிக்க வேண்டும்.<br><br><u>விடுதிக் கட்டணம்:-</u><br><br>ஆண்டு ஒன்றுக்கு ஒரு மாணாக்கருக்கு ரூ.15,000/–(ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) அனுமதிக்கப்படுகிறது.<br><br><u>பராமரிப்புக் கட்டணம்:-</u><br><br>ஆண்டு ஒன்றுக்கு ஒரு மாணாக்கருக்கு ரூ.5,000/–(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) அனுமதிக்கப்படுகிறது. | <u>கல்விக்கட்டணம்:-</u><br><br>அரசால் நியமிக்கப்பட்டுள்ள ஒரு நபர் குழு நிர்ணயம் செய்துள்ள கட்டண விகிதங்களின்படி சம்மந்தப்பட்ட பள்ளிகளுக்கு கல்விக் கட்டணம் வழங்கப்படவேண்டும். சம்மந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியரிடம் ஒரு நபர் குழு நிர்ணயித்த கல்விக் கட்டணம் மட்டுமே கேட்கப்பட்டுள்ளது என்ற உறுதிமொழி பெற்று தொகையினை விடுவிக்க வேண்டும்.<br><br><u>விடுதிக் கட்டணம்:-</u><br><br>ஆண்டு ஒன்றுக்கு ஒரு மாணாக்கருக்கு ரூ.15,000/–(ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) அனுமதிக்கப்படுகிறது.<br><br><u>பராமரிப்புக் கட்டணம்:-</u><br><br>ஆண்டு ஒன்றுக்கு ஒரு மாணாக்கருக்கு ரூ.5,000/–(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) அனுமதிக்கப்படுகிறது. |

**பெ.அமுதா,**
**அரசு செயலாளர்.**

//உண்மை நகல்//

இரா. கண்ணம்மா
31/01/17
பிரிவு அலுவலர்.

31-01-17